**செ. கு. எண்: 034** **நாள் : 10.07.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.7.2015

தர்மபுரி மாவட்டம், போச்சம்பள்ளி பண்டகப் பிரிவு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 7-ம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மணவாளன் அவர்கள் 10.5.2015 அன்று அரூர் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், நெடுஞ்சாலை ரோந்து எண்.2ல் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J.பாலசுந்தர் அவர்கள் 19.5.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகர், உக்கடம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.ரத்தினவேல் அவர்கள் 19.5.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆயுதப் படை பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.தேவ அருள் பென்சாம் அவர்கள் 23.5.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.ஜெயராமன் அவர்கள் 23.5.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் ஜெயராமன், தலைமைக் காவலர்கள் பாலசுந்தர், ரத்தினவேல், தேவ அருள் பென்சாம் மற்றும் காவலர் மணவாளன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**